**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS. 100/2022**

பெயர் : சரவணசுந்தரம் (PW1)

த/க/பெ. :

தேதி : 31.01.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பாக பிரிவினை கேட்டு இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை கிருஷ்ணமூர்த்தி என்றால்சரிதான். தாயார் சகுந்தலா. எனது தாயார் இறந்தது 2006 என்றால் சரிதான். தந்தை 2013 ல் இறந்துவிட்டார்.என் பெற்றோர்களுக்கு நான் உட்பட 2 மகன், 3 மகள் என்றால் சரிதான். என் பெற்றோர் உயிருடன் இருந்த காலத்தில் சாகுபடிக்கு உதவி செய்தது நான் தான். என் பெற்றோருக்கு பின்னர்சொத்துக்களை நான் நிர்வாகம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என் சகோதரர் 4 ம் பிரதிவாதிக்காக வழக்கில் எந்த வழக்கறிஞர் ஆஜராகிரார் என்பது தெரியாது. அவர் வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறாரா என்பதும் தெரியாது. தாவா சொத்துக்களில் 1/5 பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் என் சகோதரர் சொத்துக்களை விற்க முயற்சி செய்ததால் வழக்கு போட்டுள்ளேன். என் சகோதரர் என்ன கட்சி எடுத்துள்ளார் என்பது தெரியவில்லை. என் சகோதரரிகளின் எதிர் வழக்குரை விபரங்களை தெரிந்துக் கொண்டேன். சாட்சி மீண்டும் அதில் உள்ள விபரங்களை தெரியவில்லை என்று கூறுகிறார். என் பெற்றோர் உயிருடன் இருந்தவரை சொத்துக்கள் குறித்து ஏற்பாடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் உயில் எழுதி வைத்துள்ளதாக நினைக்கிறேன் அதனை என் அண்ணன் மறைக்கிறார். எனது வழக்குரையில் உயில் வைத்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 4 ம்பிரதிவாதியின் பதிலுரையில் உயில் எழுதி வைத்தாக சொல்லவில்லை என்றால் அதுகுறித்து தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 4 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் அவ்வாறு விவரம் உள்ளதா எ ன்றால் இல்லை. அவருக்கும் பாகம் உண்டு என்று கட்சி எடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்தில் சுமார் 50, 60 தென்னை மரங்கள் உள்ளன. அதன் மூலம் வருடத்திற்கு 15, 20 ஆயிரம் வருமானம் வருகிறது. 1 முதல் 3 பிரதிவாதிகள் பதிலுரையில் 200 தென்னை மரங்கள் உள்ளதாக சொல்லி உள்ளார்கள் என்றாலும்

அது தொடர்பாக ஆட்சேபணை எழுதி போட்டுள்ளேனா என்றால் தற்போது தான் தெரிந்துக் கொண்டேன். தாவா சொத்தில் 250 மா மரங்கள் உள்ளது என்றால் சுமார் 70, 80 மரங்கள் மட்டும் தான் உள்ளது. அதை குத்தகைக்கு விட்டுள்ளேன். அதன் மூலம் வருடத்திற்கு 1,50,000/- கிடைக்கிறது என்றால் அவ்வாறு இல்லை. 70, 80 ஆயிரம் வரும். தேக்கு மரம் சுமார் 30 இருக்கும். நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர் நியமித்து சொத்தை பார்வையிட்டால் எவ்வளவு மரங்கள் உள்ளது என்பதும், எவ்வளவு வருமானம் என்பதும் தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு ரிசிவர் நியமிப்பதில் எனக்குஆட்சேபணை இல்லை. தாவா சொத்தில் 3 மீன் குட்டை உள்ளது என்றால் சரிதான். தற்போது அதில் மீன் வளர்க்கபடவில்லை. என் தந்தைக்கு பின்னர் அவற்றை பயன்படுத்துவது இல்லை. தாவா சொத்துக்களை என் தந்தையோ நானோ விற்பணை செய்யவில்லைஎன்றால் சரிதான். தந்தை இருந்து காலத்தில் வேறு சொத்துக்களை விற்பணை செய்துள்ளார். தாவா சொத்துக்கள் அனைத்தும் தற்போது உள்ளது. வழக்கு போடுவதற்கு முன்பு பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை.காவல் நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன். பிரதிவாதிகள் 4 பேர் மீதும் புகார் கொடுத்தேன். சொத்துக்களை அவர்கள் விற்பணை செய்ய முயல்வதாக வழக்கு கொடுத்தேன். போலிசார் பேசி முடிக்கலாம் இல்லையேல் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு கூறினார்கள். காவல் நிலையளத்தில் பெண்களுக்கு பாகம் கொடுக்கலாம் என்று பேசி முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்குள்ள உரிமை பிரதிவாதிகளுக்கும் உள்ளது என்றால்சரியல்ல. ஏனெனில் என் தந்தை காலத்திலேயே அவர்களுக்குஅதிகமாக செய்துவிட்டார். இந்த விபரத்தை வழக்கில் நான் சொல்ல வில்லை என்றால் தற்போது கூடுதலாக சொல்கிறேன். என் வழக்குரையில் 1/5 பாகம் மட்டுமே கேட்டுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. தாவால ொசத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1/5 ஆக மொத்தம் 3/5 பாகம் உள்ளது என்றால்சரியல்ல. நானும் என் சகோதரரும் சேர்ந்துக் கொண்டு என் சகோதரரிகளுக்கு பாகம் கொடுக்ககூடாது என்பதால் வேண்டுமென்றே இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் சகோதரருக்கு ஆஜராவது என் வழக்கறிஞரின் ஜூனியர் என்றால் அது குறித்து தெரியாது. சொத்தை என் சகோதரர் விற்க முயல்வததற்கு எதிராக பரிகாரம் கேட்கவில்லை என்றால் அதற்காக தான் வழக்கு போட்டுள்ளேன். வா.சா.ஆ. 1 முதல் 8 பட்டா அனைத்தும் என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்

தந்தை ஏதாவது ஏற்பாடு செய்து வைத்திருந்தால் அவர்கள் பெயரில் பட்டா மாறி இருக்கும் என்றால்சரிதான். விவசாய தளவாட சாமான்களை என் தந்தைக்கு பின்னர் நான் தான்நிர்வகித்து வருகிறேன். தற்போதும அவை உபயோகத்தில் தான் உள்ளது. அதன் மூலம் வரும் வருவாயை நான் அனுபவித்துவருகிறேன் என்றால் சரிதான். தென்னை, மா மகசூல் நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் ச ரிதான். நான் அடைந்து வரும் மகசூல் வருமானத்தில் தலா 1/5 பாகம் கூடுதலாக 3/5 கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3 பம்செட் உள்ளது. நல்ல முறையில் அவை இயங்கி வருகிறது. என் சகோதரிகளுக்கு பாகம் கொடுக்ககூடாது என்று எதற்காக சொல்கிறேன் என்றால் என் தந்தை இருக்கும் போது அவர்களுக்கு அதிகமாக செய்துள்ளார். தாவா சொத்துக்கள் அளவிற்கு அவர்களுக்கு சொத்துக்கள் உள்ளது. என் தந்தை அவர்களுக்கு சொத்துக்கள் கொடுத்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் என் தந்தை அவர்களுக்கு சொத்துக் கொடுக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு சொத்து கொடுக்க கூடாது என்பதால் நானும் என் சகோதரரும் சேர்ந்து வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் தலா 1/5 பாகம் கூடுதலாக 3/5 பாகம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உள்ளது என்றால் ச ரியல்ல.